செய்தி வெளியீடு எண்:559 நாள்:30.11.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்கள் தலைமையில் பால்வளத்துறை ஆணையர் அலுவலகத்தில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு பால்வளத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், தமிழகத்தில் ஆவின் பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனையை அதிகரிக்கவும் அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர்கள், பொது மேலாளர்கள் மற்றும் மாவட்ட துணைப் பதிவாளர்கள் (பால்வளம்) ஆகியோர் கலந்துகொண்ட கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஆவின் இணையத்தின் தலைவர் திரு அ.மில்லர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., பால்வளத்துறை ஆணையர் / ஆவின் நிர்வாக இயக்குநர் திரு சுனீல்பாலீவால், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களால் திருவண்ணாமலை மாவட்டம் அம்மா பாளையத்தில் திறந்து வைக்கப்பட்ட பால் பவுடர் தொழிற்சாலைக்கு உணவு பாதுகாப்பு மேலாண்மை தரச்சான்றிதழ் (ISO 22000) வழங்கப்பட்டுள்ளது. மேலும், உதக மண்டலத்தில் அமைந்துள்ள கருவூல ஜெர்சி பொலிகாளை பண்ணைக்கு தரம் வாய்ந்த உறைவிந்து குச்சிகள் உற்பத்தி செய்ததன் அடிப்படையில் மத்திய அரசால் 2015–2016–ம் ஆண்டிற்கு ‘A’ கிரேடு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இந்த சான்றிதழ்களை பெற்றதற்காக ஆவின் நிறுவனத்திற்கு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் தங்களின் பாராட்டுதலை தெரிவித்து சான்றிதழ்களை ஆவின் நிர்வாக இயக்குநர் அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பால்வளத்துறை வளர்ச்சிக்காக அறிவித்த பல்வேறு திட்டங்களின் பயனாக பால் கொள்முதல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அளவில் நாளொன்றுக்கு 30 லட்சம் லிட்டராகவும் மற்றும் பால் விற்பனை நாளொன்றுக்கு சராசரியாக 21.12 லட்சம் லிட்டராகவும் உள்ளது. மேலும் பால் உற்பத்தியாளர்கள் நலனுக்காக ரூபாய் 36.28 கோடி

செலவில் பெரம்பலூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 1 லட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் பால் பண்ணை மற்றும் ஈரோடு மாவட்டத்தில் ரூ.20.36 கோடி செலவில் கால்நடை தீவனத் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பெரம்பலூர் பால்பண்ணை மற்றும் ஈரோடு கால்நடைத் தொழிற்சாலையில் பணிகள் முடிவுற்ற நிலையில் இந்த தொழிற்சாலைகளின் சோதனை ஓட்டம் நடைபெற உள்ளதைக் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் இந்த தொழிற்சாலைகள் செயல்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பால் உற்பத்தியாளர்களுக்கு பால்பண பட்டுவாடா குறித்த நேரத்தில் அளிக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பால்பண பட்டுவாடா விவரங்களை ஆய்வு செய்து, பால்பண பட்டுவாடா குறிப்பிட்ட காலங்களில் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், 2016–17 நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 45 கோடியில் மதுரை பால்ண்ணையில் ஐஸ்கிரீம் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். இந்த அறிவிப்பின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஆய்வுசெய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பணிகள் விரைவில் தொடங்கப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 82.54 கோடியில் பாலிதீன்பிலிம் தொழிற்சாலை விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர் பேட்டையில் அமைக்கப்படும் என்று அறிவித்தியிருந்தார்கள். இதற்காக எடுக்கப்பட்டு வரும் ஆரம்ப கட்ட பணிகள் குறித்து மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அம்பத்தூர் பால்பண்ணை வளாகத்தில் நாளொன்றுக்கு 15 ஆயிரம் லிட்டர் ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலையை தொடங்கி வைத்தார்கள். இதன் பயனாக நாளொன்றுக்கு 800 முதல் 1000 லிட்டர் வரை விற்பனையான ஐஸ்கிரீம் தற்பொழுது நாளொன்றுக்கு 3500 லிருந்து 4000 லிட்டர் என்ற அளவில் சென்னை மற்றும் மாவட்டங்களின் முக்கிய நகரங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஐஸ்கிரீம் விற்பனையை நாளொன்றுக்கு 7000 முதல் 8000 லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் அதிக அளவில் ஐஸ்கிரீம் விற்பனை செய்ய தேவையான

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

ஆவின் மில்க் ஷேக் மற்றும் நறுமணப்பால் டெட்ரா பேக்குகளில் விற்பனை, கடந்த ஆண்டுகளில் மாதம் ஒன்றுக்கு 4 லட்சம் என்ற அளவிலிருந்து 6.50 லட்சம் ஆக உயர்ந்துள்ளது. இதன் விற்பனையை 10 லட்சம் ஆக உயர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சி மற்றும் பாராட்டை தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஒப்புதலுடன் பால்வள மான்யக்கோரிக்கையில் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் ரூபாய் 850 லட்சம் செலவில் அதிநவீன பாலகங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதனை செயலாக்கும் விதமாக உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்று மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய தலைவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைவர்கள் திரு பி.வி. தாமோதரன் (கோயம்புத்தூர்), திரு.வி.சண்முகம் (சிவகங்கை), திரு.ஆர்.சின்னசாமி (சேலம்), திரு.கே.விஜயகுமார் (விழுப்புரம்), திரு.திவான்பாட்சா (திண்டுக்கல்), திரு.ட்டி.சந்திரன் (காஞ்சிபுரம் திருவள்ளூர்), திரு எஸ்.ஏ.அசோகன் (கன்னியாகுமரி), திரு.எஸ்.தென்னரசு (தர்மபுரி), திரு.வேலழகன் (வேலூர்), திரு.ஆர்.காந்தி (தஞ்சாவூர்), திரு.ராஜேந்திரன் (திருச்சி), திரு.ஆர்.என்.நடராஜன் (புதுக்கோட்டை), திரு.கே.சி.தங்கராஜன் (மதுரை), திரு.பி.கண்ணன் (விருதுநகர்), திரு.எஸ்.ரமேஷ் (திருநெல்வேலி), துணை பால் ஆணையர் திரு சண்முகராஜ்குமார், பொதுமேலாளர் (நிதி மற்றும் நிர்வாகம்) திரு சி.ரவி, பொதுமேலாளர்(திட்டம் மற்றும் பொறியியல்) திரு செ.லோகிதாஸ், பொதுமேலார்(விற்பனை) திரு எஸ்.கே.கதிர்வேலு மற்றும் ஆவின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**